IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No. 208/2020**

**நாள்– 30.06.2025**

**பி.வா.சா.2 திருமதி. காளீஸ்வரி –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்ணில் உள்ள இடம் மற்றும் அதன் நான்கு மால்களை நான் ஆய்வு செய்தேனா என்றால் ஆய்வு செய்தேன். அந்த இடத்தில் ஒரு கட்டிடம் இருந்தது, அதில் 2 கடைகளும், ஒரு வீடும் அடக்கம். அதில் காலி மனை எதுவும் காணப்படவில்லை. அந்த கடைகள் மற்றும் வீட்டிற்குரிய 3 வரி ரசீதுகளை நான் தற்போது தாக்கல் செய்கிறேன். அந்த வீட்டின் முகவரி 24–2/40–2, காதர்ஓலி தரக்கனார் தெரு ஆகும். ஒரு கடையின் முகவரி 24–3/40–3, காதர்ஓலி தரக்கனார் தெரு ஆகும். மற்றொரு கடையின் முகவரி 24–4/40–4, காதர்ஓலி தரக்கனார் தெரு ஆகும். மேற்படி 3 ரசீதுகளும் M.A. ஜாபர் சாதிக் என்பவரது பெயரில் வழங்கப்பட்டுள்ளன. அவை **Ex.X2 வரிசை** ஆகும். மேற்படி கட்டிடங்களின் வயது சுமார் 8 – 10 வருடங்கள் இருக்கலாம். மேற்படி இடத்தின் வரைபடத்தையும் நான் தாக்கல் செய்கிறேன். நகரமைப்பு ஆய்வாளர் கையொப்பமிட்ட வார்டு N, Block 3க்கான மேற்படி **வரைபடம் Ex.X3** ஆகும். மேற்படி வரைபடத்தில் வீடுகள் மற்றும் கடைகள் அனைத்தும் மொத்தமாக காட்டப்பட்டுள்ளன.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

மேற்படி இடத்தில் காணப்பட்ட ஒரு வீடு மற்றும் 2 கடைகளுக்கு செங்கோட்டை நகராட்சியில் ஏதேனும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. மேற்படி கட்டிடங்களுக்குரிய 2020ம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட பழைய ரசீதுகள் எவையேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi